தேசிய வகை சுங்கை ரெங்கம் தமிழ்ப்பள்ளி
SJK (T) SUNGAI RENGGAM

# தமிழ் மொழி – ஆண்டு 6

## நான் ஒரு வானூர்தி

நான் ஒரு ______________________. நான் விந்தைமிகு அறிவியல் கண்டுபிடிப்பில் ______________________ போக்குவரத்துச் சாதனமாகத் திகழ்கிறேன். என் பெயர் 'மலேசியா ஏர்லைன்ஸ்'. நான் ஜப்பானில் தயாரிக்கப்பட்டேன். அங்கிருந்து மலேசியாவிற்கு ______________________ செய்யப்பட்டேன். நான் வெள்ளை நிறத்தில் ______________________ காட்சியளிப்பேன். என் நண்பர்களும் என்னைப் போலவே இருப்பர். எங்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட பதிவிட்ட எண்கள் இருக்கும். அதனைக் கொண்டே எங்களை ______________________.

நான் பல அளவுகளையும் வடிவங்களையும் கொண்டவன். நான் பறவையைப் போல் ______________________ உருவம் படைத்தவன். என்னுள் பல இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. நான் தரமான உலோகங்களாலும் ______________________ பொருள்களாலும் உருவாக்கப்பட்டேன். என்னுள் கணினிகள் மற்றும் ______________________ வசதியும் இணைக்கப்பட்டுள்ளன. நான் நூற்றுக்கும் மேற்பட்டோரை ______________________ செல்லும் வல்லமை கொண்டவன். மக்கள் என்னை வான் போக்குவரத்தாகவும், ______________________ பொழுதுபோக்கிற்காகவும் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகளுக்காகவும் பயன்படுத்துகின்றனர்

நான் வானத்தில் ______________________ பறக்க முடிந்தவன். பெரியவர் முதல் சிறியவர் வரை; பணக்காரர் முதல் வசதி குறைந்தவர் வரை இப்பூவுலகைச் சுற்றி வலம் வருவதற்கு என்னை நாடுவர். மின்னல் வேகத்தில் பயணிக்கும் என்னைக் கண்டு மக்கள் ______________________. நான் விமானிகள் இருவரின் துணையோடு என்னுள் பயணிக்கும் மக்களைக் ______________________ நேரத்தில் சரியான இடத்தில் கொண்டு சேர்ப்பேன்.

LIVEWORKSHEETS

நான் பிறந்து 30 ஆண்டுகள் ஆயினும் இன்னும் முதல் நாள் போல் வானில் ______________________ பறந்து கொண்டுதான் இருக்கிறேன். என்னை நம்பி பயணிக்கும் பயணிகளைப் ______________________ கொண்டு சேர்க்கும் பணியை ஆற்றும் என் வாழ்க்கை ______________________ இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

| | | |
|---|---|---|
| கம்பீரமாகக் | மின்னேற்றி | நெகிழ்ப் |
| சுமந்து | இறக்கை | வானூர்தி |
| சரக்குப் போக்குவரத்தாகவும். | உயர்நிலை | இறக்குமதி |
| அஞ்சுவதுண்டு | மெய்மறந்து | சுதந்திரமாகப் |
| மகிழ்ச்சியாக | பத்திரமாகக் | குறித்த |
| வித்தியாசப்படுத்துவர். | | |

LIVEWORKSHEETS

LIVEWORKSHEETS